பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 29 வியாழக்கிழமை 14.07.2022 கதிர் 140

## கொழும்பில் மீளவும் ‘ஊரடங்கு’ உத்தரவு!




கொழும்பு மாவட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று நண்பகல் 12 மணியிலி 2

## கைப்பற்றிய அரச மாளிகைகளை மீளக் கையளிப்பதற்கு இணக்கம்

### இலக்கை அடையும் வரை போராட்டம் தொடரும்; காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் அறிவிப்பு



கொழும்பு - காலிமுகத்திடல் போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்ட ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட அரச கட்டடங்களை மீண்டும் அரச அதிகாரிகளிடம் கையளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை மற்றும் பிரதமர் செயலகம் என்பனவற்றை அதிகாரிகளிடம் ஒப்படைக்கவுள்ளதாகப் போராட்டக்காரர்கள் இன்று அறிவித்துள்ளனர். 2

## மஹிந்த, பஸில் இன்னமும் நாட்டை விட்டு ஓடவில்லை

### - சட்டத்தரணிகள் ஊடாக அவர்கள் இன்று அறிவிப்பு



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆர்ட்டிகல ஆகியோர் நாளை வரை நாட்டை விட்டு வெளியேறமாட்டார்கள் என அவர்கள் சார்பில் இன்று முன்னிலையான சட்டத்தரணிகள் உயர்நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

உயர்நீதிமன்றத்தின், முன் அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறுவதற்கு, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்னாள் அமைச்சர் 2

# மாலைதீவில் இருந்து இன்று சிங்கப்பூர் பறந்தார் கோட்டா

### வெளியாகுமா பதவி விலகல் கடிதம்?



பலத்த எதிர்ப்புக்களையும் அழுத்தங்களையும் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் சந்தித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று 2

## மீறினால் சுடுவோம்!

### – போராட்டக்காரர்களுக்கு இராணுவம் எச்சரிக்கை



அரச சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தும் வகையிலும் வன்முறையைத் தூண்டும் வகையிலும் எவரும் செயற்பட முடியாது. அவ்வாறு செயற்படுவோர் மீது இராணுவ அதிகாரம் பிரயோகிக்கப்படும். 2

## ஜனாதிபதியின் இராஜினாமாக் கடிதம் கிடைக்காவிட்டால் என்ன செய்யலாம்?

### சட்ட ஏற்பாடுகள் குறித்து சபாநாயகர் ஆராய்வு; நாளை காலை அவசர கட்சித் தலைவர் கூட்டம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராஜிநாமாக் கடிதத்தைக் கையளிக்காவிடின் அவர் பதவியை விட்டுச் சென்றதாகக் கருத வேண்டி வரலாம் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இராஜிநாமாக் கடிதம் கிடைக்காவிட்டால் அது தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய சட்ட ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் சபாநாயகர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். 2

## போராட்டத்தில் காயமடைந்தோர் எண்ணிக்கை 130 ஆக அதிகரிப்பு



கொழும்பில் நேற்று இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்களின்போது போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 130 ஆக அதிகரித்துள்ளது.

நாடாளுமன்றத்துக் 2

## இராணுவச் சிப்பாயைக் கடுமையாகத் தாக்கி துப்பாக்கியை அபகரித்த போராட்டக்காரர்கள்

### 60 தோட்டாக்கள் அடங்கிய இரு மகசின்களும் பறிமுதல்

நாடாளுமன்றத்துக்குப் பிரவேசிக்கும் பத்தரமுல்லை- பொல்துவ சந்திக்கு அருகில் நேற்று மாலை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவரும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



## தந்தையை மண்வெட்டியால் தாக்கி கொடூரமாகக் கொலைசெய்த மகன்

மண்வெட்டியால் தாக்கப்பட்டதில் பலத்த காயமடைந்த வயோதிபர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

மஹஓயா, ஹிகுராலந்த பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 60 வயதுடைய வயோதிபரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. 2

## கண்ணீர்ப்புகையால் பாதிக்கப்பட்டு இளம் குடும்பஸ்தர் பரிதாப மரணம்!



கொழும்பிலுள்ள பிரதமர் செயலகத்தைப் போராட்டக்காரர்கள் நேற்று ஆக்கிரமித்த வேளை பொலிஸாரின் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

மஹவ, தலதாகம பிரதேசத்தில் வசிக்கும் இரண்டு 2

## போராட்டத்தில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குப் பிரவேசிக்கும் பத்தரமுல்லை - பொல்துவ சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் 90 பேர் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்களில் 5 பெண்களும், பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த இருவரும், ஊடகவியலாளர்கள் இருவரும் அடங்குகின்றனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரை பதவி விலகுமாறு கோரி நேற்று மாலை நாடாளுமன்ற வளாகம் மற்றும் நாடாளுமன்றத்துக்கு அருகில் உள்ள சபாநாயகரின் இல்லத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருந்தன.

இதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைப்பதற்கு இருவேறு சந்தர்ப்பங்களில் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

இதேவேளை, கொள்ளுப்பிட்டி - ப்ளவர் வீதிப் பகுதியில் உள்ள பிரதமர் செயலக வளாகத்தில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில், காயமடைந்த 40 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், நேற்று முற்பகல் பிரதமர் செயலகம் நோக்கிப் பேரணியாகச் சென்றனர். இதன்போது, அவர்கள் பல தடவைகள் பிரதமர் செயலகத்துக்குள் நுழைய முற்பட்டனர்.

அவர்களைக் கலைப்பதற்காகப் பொலிஸார் பல தடவைகள் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

அதனையும் மீறி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதமர் செயலகத்துக்குள் நேற்றுப் பிற்பகல் உட்பிரவேசித்தனர்.

## கண்ணீர்ப்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிள்ளைகளின் தந்தையான டி.எம். ஜாலிய திஸாநாயக்க என்ற 26 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

அவர் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டிருந்தவர் எனவும், கண்ணீர்ப்புகை காரணமாக ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் தந்தை மஹவ பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினராவார்.

நேற்றுக் காலை தனது நண்பர்கள் குழுவுடன் காலிமுகத்திடல் போராட்டக் களத்துக்கு வந்த ஜாலிய, நண்பகல் பிரதமர் செயலகத்தை ஆக்கிரமித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தந்தையை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த நபர் மஹஓயா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டதன் பின்னர் உயிரிழந்துள் ளார் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் மகனே இந்தத் தாக்குதலை மேற் கொண்டுள்ளார்.

சந்தேகநபர் மஹஓயா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## கொழும்பில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ருந்து நாளை அதிகாலை 5 மணி வரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த ஊரடங்கு உத்தரவு தொடர்பில் விசேட அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் தற்போதைய நிலைமையில் பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டே இந்த ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது என்று பதில் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்குப் பகிரப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், இந்த ஊரடங்கு உத்தரவைப் பதில் ஜனாதிபதி பிறப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கைப்பற்றிய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வரும் மக்கள் கடந்த 9ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகை ஆகியவற்றைக் கைப்பற்றியதுடன், நேற்றுப் பிரதமர் செயலகத்தையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், அமைதியை ஏற்படுத்தி அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடியவாறு அந்தக் கட்டடங்களை அதிகாரிகளிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனைத் தொடர்ந்து இன்று விசேட செயலாளர் சந்திப்பை நடத்திய போராட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் குழுவினர் அவற்றை மீளக் கையளிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எனினும், ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகும் வரையில் தமது போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

## மீறினால்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு இலங்கை இராணுவம் விசேடஅறிவிப்புஒன்றைவிடுத்துள்ளது.

நாடு அமைதி நிலை பேணப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டுள்ளமையாலும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதாலும் சொத்துக்களுக்குச்சேதம்ஏற்படுத்தும்வகையிலும் வன்முறையைத் தூண்டும் வகையிலும் செயற்படுவதை ஆர்ப்பாட்டக்காரர்கள்தவிர்த்துக்கொள்ளவேண்டும். அவ்வாறில்லையெனில் அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பாதுகாப்புப் படையினர் முழுமையான அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டியேற்படும் - என்று இலங்கை இராணுவம் மேலும் அறிவித்துள்ளது.

## மகிந்த, பஸில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பஸில் ராஜபக்ச, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால், டபிள்யூ.டி.லக்ஸ்மன் மற்றும் நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆடிகல உள்ளிட்டோருக்கு இடைக்காலத் தடை விதிக்கக் கோரி நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரமொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கையின் நீச்சல் வீரரும் பயிற்றுவிப்பாளருமான ஜூலியன் பொலிங், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேனல் மற்றும் ஜெஹான் கனக ரட்ணம் ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவுக்கமைய இந்த நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவில், நிதி முறைகேடுகள் மற்றும் இலங்கை பொருளாதாரத்தின் தவறான நிர்வாகத்துக் காரணமானவர்களுக்குஎதிராகசட்டநடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மனுதாரர்கள் கோரினர்.

சட்டத்தரணி உபேந்திர குணசேகரவின் ஊடாக இந்தப் பிரேரணையை தாக்கல் செய்த மனுதாரர்கள், இந்த விவகாரத்தில் அவசரம் உள்ளதால், இந்த மனுவை ஜூலை 14 ஆம் திகதி (இன்று) விசாரணைக்கு எடுக்கக் கோரினர்.

முன்னதாக குறித்த அடிப்படை உரிமைகள் மனுவை எதிர்வரும் ஜூலை 27ஆம் திகதிவரை ஒத்திவைத்து கடந்த ஜூலை 6ஆம் திகதி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேற்கண்ட பிரதிவாதிகளில் சிலர் நாட்டை விட்டு வெளியேறக்கூடும் என்றும், அதன் முறையான விசாரணை தடைப்படலாம் என்றும் நம்பத்தகுந்த முறையில் தங்களுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளதால் மனுதாரர்கள் முன்கூட்டியே மனுவை விசாரணைக்கு எடுக்க நகர்த்தல் பத்திரத்தை தாக்கல் செய்வதாகத் தெரிவித்தனர். இதன்படி, இந்த மனு இன்று உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. அதற்கமைய, குறித்த மனுக்கள் மீதான மேலதிக விசாரணை நாளை இடம்பெறவுள்ளது என உயர்நீதிமன்றம் அறிவித்தது.

இந்நிலையில், நாளை வரை நாட்டை விட்டு வெளியேறப் போவதில்லை என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் முன்னாள் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆர்ட்டிகல ஆகிய மூவரும் தமது சட்டத்தரணிகளின் ஊடாக நீதிமன்றத்துக்கு உறுதியளித்தனர். இதேவேளை, தனக்கு நாட்டை விட்டு வெளியேற வேண்டியமைக்கான தேவை இல்லை என்று மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உயர்நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் இராஜிநாமாக் கடிதம் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை என்று சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்தத் தருணத்தில் தாம் மிகுந்த அழுத்தத்தில் உள்ளதாகவும், விரைவில் இராஜிநாமாக் கடிதத்தை அனுப்பி வைப்பதாகவும் அவர் தெரிவித்ததாக சபாநாயகர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தமது இராஜிநாமாக் கடிதத்தைக் கையளிக்காத காரணத்தால், நாளை நாடாளுமன்றத்தைக் கூட்டுவது நிச்சயமற்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நாளை அவசர கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு சபாநாயகர் அழைப்பு விடுத்துள்ளார்.

சபாநாயகர் தலைமையில் நாளை காலை 10 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

## இராணுவச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதில், படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருந்து நாரஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களால் இராணுவச் சிப்பாய் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டார் எனவும், அவரது ரி - 56 ரக துப்பாக்கியும், 60 தோட்டாக்கள் அடங்கிய இரு மகசின்களும் போராட்டக்காரர்களால் அபகரிக்கப்பட்டன என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த இராணுவச் சிப்பாய் வெல்லவாய இராணுவ முகாமில் கடமையாற்றுபவர் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## மாலைதீவில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகல் மாலைதீவிலிருந்து சிங்கப்பூர் நோக்கிப் புறப்பட்டார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி, அவரது மனைவி அயோமா ராஜபக்ச மற்றும் இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நேற்றிரவு சிங்கப்பூர் எயார்லைன்ஸ் விமானத்தில் மாலைதீவில் இருந்து சிங்கப்பூர் செல்ல இருந்தனர்.

எனினும், பாதுகாப்புக் காரணங்களால்திட்டமிட்டபடிபயணிகள் விமானத்தில் சிங்கப்பூருக்குச் செல்லவிருந்த பயணம் பிற்போடப்பட்டது.

மாலைதீவில் இருந்து புறப்படுவதற்குக் கோட்டாபய ராஜபக்ச ஒரு தனியார் ஜெட் விமானத்தைக் கோரியிருந்தார் என்றும், இது தொடர்பில் மாலைதீவு அதிகாரிகள் நேற்று நள்ளிரவு பேச்சுகளை மேற்கொண்டிருந்தனர் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், இன்று பகல் மாலைதீவின் வெலனா சர்வதேச விமான நிலையத்திலிருந்துசவூதிஎயார்லைன்ஸ் ரீா 788 விமானத்தில் சிங்கப்பூர் நோக்கி ஜனாதிபதி பயணமானார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இன்று சிங்கப்பூர் சென்றடைந்த பின்னர் தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்புவார் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தொழுக்கு முதலி வேலை

ராஜபக்ஷக்களின் அட்டூழிய ஆட்சியால் இலங்கை மக்களுக்கு – குறிப்பாகத் தென்னிலங்கை மக்களுக்கு – ஏற்பட்டுள்ள விரக்தியை, வெறுப்பை, சீற்றத்தை சில கபட சக்திகள் தங்களின் அரசியல் லாபமாக மாற்ற முயலும் மோசடி தந்திரம் தென்னிலங்கையில் கட்டவிழ்கின்றது. இது தொடர்பில் தமிழர் தேசம் கவனமாக – விழிப்பாக – செயல்பட வேண்டும். அதுவும் தமிழர் தேசத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்கள் என்று உரிமை கொண்டோர் தம்மை மிக மிக அவதானமாக முன் நிறுத்த வேண்டும். அவர்களின் கருத்து வெளிப்பாடு வெறுமனே அவர்களது தனித்துவ நிலைப்பாடு என்பதற்கு அப்பால், ஒட்டுமொத்த தமிழினத்தின் கருத்தியல் நிலைப்பாடாகக் கவனத்தில் கொள்ளப்படும் என்பதால் அவர்கள் மிக மிக அவதானமாக இருக்க வேண்டும்.

ஒரு பக்கம் ராஜபக்ஷக்களின் பின்புலத்தில் தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி மக்களால் தோற் கடிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற நினைக்கின்றார் என்று நீதி பேசி, அதற்கு எதிராகத் துள்ளிக் குதிப்போர், மறுபுறத்தில் என்ன செய்கின்றார் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ராஜபக்ஷக்களின் நிர்வாகச் சீர்கேட்டினால் மக் களுக்கு ஏற்பட்ட அதீத வெறுப்பைப் பயன்படுத்தி, அதனைத் தந்திரோபாயமாகப் பிரயோகித்து, மக்களால் தெரிவே செய்யப்படாத அளுபக்கரங்கள் தம் விருப்பப்படி நாட்டை நிர்வகிக்க, சீரழிக்க கங்கணம் கட்டிக் காய் நகர்த்துகின்றன. அந்த சதிக்குத் தெரிந்தோ, தெரியாமலோ தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் என்ற முடியை இப்போது சூடிக்கொண்டிருப்பவர்கள் பகிரங்கமாகத் துணை போகின்றனர் என்ற எரிச்சல் தமிழ் மக் கள் மத்தியில் உணர்வலையாக எழுந்துள்ளது.

ராஜபக்ஷக்களின் கடைக்கண் பார்வையால் அதிகாரத்துக்கு வந்தவர் ரணில் என்றால், அவராவது குறைந்தபட்சம் தேசிய பட்டியல் மூலம் எம்.பியாகி மக்கள் பிரதிநிதித்துவத்தைப் பெற்றவர். ஆனால் அவரை வெறுத்து ஒதுக்கி, நாங்கள் அணி சேரும் அளுபக்கரங்கள் மக்களைத் தேர்தலில் சந்தித்தவர்கள் கூட இல்லை. அது மாத்திரமல்ல, அந்த அளுபக்கரங்களின் பின்னால் திரண்ட மக்கள் அவர்களுக்காக – அவர்கள் கருத்தியலுக்காக – திரண்டவர்கள் அல்லர். மாறாக, ராஜபக்ஷக்களின் சீரழிவு செயற்பாட்டு வெறுப்புகளால் அதற்கு எதிராக ஒன்று சேர்ந்தவர்கள்.

ராஜபக்ஷக்களின் அதிகார மூலம் கிடைத்ததை பிறிதொரு ரணில் பிரயோகிக்கக் கூடாது என்றால், ராஜபக்ஷ எதிர்ப்பு மூலம் கிடைத்ததை பிறிதொரு அளுபக்கரங்கள் பயன்படுத்தவும் தமிழர்கள் துணை போகக்கூடாது.

மக்கள் எப்படி வாக்களித்தாலும் தீர்மானிப்பவர்கள் தலைவர்கள்தான்.

டி.எஸ். சேனநாயக்கா, டட்லி, பண்டாரநாயக்கா, ஸ்ரீமாவோ, ஜே.ஆர்., பிரேமதாஸ, சந்திரிகா, மஹிந்த, மைத்திரி, கோட்டா என்ற வரிசையில் பேரினவாத வெறி அளவீட்டில் கீழ் மட்டத்தில் இருப்பவர் ரணில்தான்.

சுயநிர்ணய உரிமையில் அடிப்படையிலான இணக்க தீர்வுக்கு முன்வந்த ஒஸ்தலோ அறிவிப்புக்கும், 2015 – 2019 காலத்தில் சுமந்திரன் போன்றோருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு நகலுக்கும் துணை நின்றவர் ரணில்தான் அவற்றினால் தான் பேரினவாத சிங்களவர்களினால் அரசியல் முகவரியற்ற நிலைக்கு அவர் தூக்கி எறியப்பட்டார்.

தென்னிலங்கை அரசியலில் நீதி நிலைநாட்டப் போய் தமிழருக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. தெரியாத தேவதை – சஜித்தோ, சம்பிக்கவோ, அநுர குமார திஸநாயக்காவாகவோ, டலஸ் அழகப்பெருமா கவோ இருக்கலாம். அந்தத் தேவதைக்காக தெரிந்த பிசாசை – ரணிலை – எதிர்க்க வேண்டிய தேவை தமிழருக்கு இல்லை.

பௌத்த – சிங்கள பேரினவாதத்தைக் கிளப்பியமைக்காக மட்டுமே ராஜபக்ஷக்களை அதிகாரத்துக்குத் தெரிவு செய்த சிங்களத்தனப் போக்குக்கு, இப்போது நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை தமிழருக்கு இல்லை. தென்னிலங்கைக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் தொலுக்கு முதலி வேலைக்குப் போய், தமிழர் தரப்பு தேவையில்லாத பிரச்சினைகளையும் எதிர்ப்புகளையும் கிளப்பி, வினையை விலைக்கு வாங்காமல் இருப்பது நல்லது.

ராமன் ஆண்டாலும், கூட வந்த குரங்காண்டாலும் நமக்கு என்ன வம்பு? தமிழருக்கு நீதி செய்யக்கூடிய – இனவாதத்தில் ரணிலை விடக் குறைந்த – தரப்புத்தான் மாற்றுத் தலைமை என்பது உறுதியாகாத நிலையில், நாம் வாய் மூடி மௌனம் காப்பதே சிறந்தது.

# ரணில் வழங்கும் சட்டவிரோத செயற்பாட்டை பாதுகாப்புத் தரப்பினர் பின்பற்றக் கூடாது!

## சரத்பொன்சேகா அறிவுரை



பாதுகாப்பு படையினர் ரணில்விக்கிரமசிங்க வழங்கும் சட்டவிரோத அரசமைப்பிற்கு முரணாண உத்தரவை செவிமடுக்கக்கூடாது; பின்பற்றக்கூடாது என சரத்பொன்சேகா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனது முகநூல் பதிவில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

ரணில் ஜனாதிபதியின் அதிகாரங்களை சட்டவிரோதமாக கைப்பற்றியுள்ளார். தன்னை பதில் ஜனாதிபதியாக அறிவித்துள்ளார் என சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். துப்பாக்கி பிரயோகத்தினை மேற்கொள்வதற்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் மத்தியில் வதந்திகள் பரவுகின்றன முப்படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல் உருவாகும் கடும் ஆபத்து காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுதம் ஏந்தாத அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதலை மேற்கொள்ள வேண்டாம் எனவும் ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்டத்தை பின்பற்றும் ஒழுக்கமான இராணுவம் என்ற வகையில் ஆயுதங்களை உயர்த்துமாறும் நான் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுக்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த தருணத்தில் நான் போராட்டக்களத்தில் நிற்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி பதவி விலகாவிடில் நான் உடன் பதவி விலகுவேன்

## கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் அறிவித்தார் சபாநாயகர்

'ஜனாதிபதி பதவி விலகாவிடில் நான் பதவி விலகுவேன்' என கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா தெரிவித்துள்ளார்.

நேற்று(புதன்கிழமை) இடம்பெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# நாடாளுமன்றுமீது தாக்குதல் மேற்கொண்டால் பதில் தாக்குதல் நடத்த அனுமதி வழங்குக!

## பாதுகாப்புத் தரப்பினர் கோரிக்கை

நாடாளுமன்றம் மீது தாக்குதல் மேற்கொண்டால், பதில் தாக்குதலை நடத்துவதற்கு தமக்கு அனுமதி வழங்குமாறு பாதுகாப்பு தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது.

எனினும், அந்தக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவில்லை என எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த சந்திப்பில் முப்படைத் தளபதிகள் கலந்து கொண்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றம் மீது தாக்குதல் மேற்கொண்டால், பதில் தாக்குதலை நடத்துவதற்கு தமக்கு அனுமதி வழங்குமாறு முப்படையினர் இதன்போது கோரிக்கை விடுத்தனர் எனவும், இதற்கான அனுமதியை தம்மால் வழங்க முடியாது எனத் தாம் தெரிவித்தேன் எனவும் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

பதில் ஜனாதிபதியாக சபாநாயகர் நியமிக்கப்பட்டால் மாத்திரமே, தாம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாஸ்போர்ட் பெற 50 ஆயிரம் ரூபா!

## மூவர் கைது

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கண்டி கிளை அலுவலகத்துக்கு கடவுச்சீட்டு பெற வரும் இளைஞர்களுக்கு ஒரு நாள் மற்றும் சாதாரண சேவையின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டு தயாரித்து தருகிறேன் எனக் கூறி அவர்களிடம் இருந்து 6 ஆயிரம் முதல் 50,000 ரூபா வரை பணம் பெற்றதாகக் கூறப்படும் அந்த அலுவலகத்தின் முன்னாள் ஊழியர் ஒருவர் மற்றும் மேலும் இருவரை அங்கு இருந்த இளைஞர்கள் குழுவொன்று பிடித்து கண்டி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். ஒரு நாள் சேவையின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டு வழங்குவதற்கு கண்டி அலுவலகம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான விண்ணப்பங்களையே வழங்குகிறது.

குறித்த சந்தேக நபர்கள் சில விண்ணப்பங்களை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டு பணத்துக்கு விற்பனை செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஒரு நாள் சேவையின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டை தயாரிப்பதற்காக 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபா வரையிலும், சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டைத் தயாரிப்பதற்காக 6 ஆயிரம் ரூபா வரையிலும் சந்தேக நபர்கள் பெற்றுள்ளனர் என இந்த விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

ஒரு நாள் சேவையின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டைத் தயாரிப்பதற்காக தெஹியத்தகண்டிய பிரதேசத்தைச் சேர்ந்த யுவதி ஒருவரிடம் 25 ஆயிரம் ரூபாவை முற்பணமாகப் பெற்றுக் கொண்ட போது வெளிநாட்டு கடவுச்சீட்டு பெற வந்த இளைஞர்கள் குழுவொன்றால் மூன்று சந்தேக நபர்கள் பிடிபட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரில், குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தில் சில காலம் பணிபுரிந்தவர் எனக் கூறப்படும் ஒருவரும், ஓட்டோச் சாரதி ஒருவரும், மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் உள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
வியாழக்கிழமை 14.07.2022

# அதிநவீன ஏவுகணைகள் மூலம் ரஷ்ய படை தாக்குதல்; ஒரே நாளில் 420 உக்ரைன் வீரர்கள் கொன்று குவிப்பு



உக்ரைனில் அதிநவீன ஏவுகணை தாக்குதல் மூலமாக ஒரே நாளில் 420 உக்ரைன் ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருக்கின்றமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் உக்கிரமான போர் 130 நாள்களை கடந்தும் தொடர்ந்து வருகிறது. கிழக்கு உக்ரைனை கைப்பற்றுவதற்காகவே வேகமாக முன்னேறி வரும் ரஷ்ய படைகள் நாட்டில் பிற பகுதிகளிலும் தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் தெற்கு உக்ரைனில் இருக்கும் மைக்கோலைவ் நகரில் ரஷ்ய படைகள் நடத்திய தாக்குதல்களில் ஒரே நாளில் 420 உக்ரைன் வீரர்கள் உயிரிழந்தனர் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

இது குறித்து ரஷ்யா ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மைக்கோலைவ் நகரில் உள்ள ஒரு கப்பல் கட்டும் தளத்தில் ரஷ்ய படைகள் அதிநவீன ஏவுகணைகளை கொண்டு துல்லியமாக தாக்குதல் நடத்தியதாகவும், இதில் 350 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிய வந்துள்ளது. அதேபோல மைக்கோலைவ் நகரில் இருக்கும் தற்காலிக ராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட துல்லிய தாக்குதலில் 70 உக்ரைன் வீரர்கள் உயிரிழந்திருக்கின்றனர் என ரஷ்யா கூறியுள்ளது. உக்ரைன் ராணுவம் ஆதிக்கம் மிகுந்த பகுதிகளில் தாக்குதல் தீவிரப்படுத் தப்படும் என்று ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

## இங்கிலாந்து பிரதமர் பதவிக்கான முதல் சுற்று தேர்தலில் ரிஷி சுனாக் வெற்றி

### இன்று 2ம் கட்ட வாக்குப்பதிவு



இங்கிலாந்தில் பாலியல் குற்றச்சாட்டில் சிக்கிய கிறிஸ் பின்சரை கன்சர்வேடிவ் கட்சியின் துணை கொறடாவாக நியமித்த பிரதமர் போரிஸ் ஜான்சனை கண்டித்து அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் என 50 பேர் அடுத்தடுத்து பதவி விலகினர். இதைத் தொடர்ந்து ஜான்சன் தனது பதவியை ராஜினாமா செய்தார். தற்போது தற்காலிக பிரதமராக உள்ளார். நாட்டின் புதிய பிரதமருக்கான போட்டியில் கன்சர்வேடிவ் கட்சியை சேர்ந்த 11 பேர் களமிறங்கி உள்ளனர். இதில் முன்னாள் நிதியமைச்சரும் இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான ரிஷி சுனாக், வெளியுறவு அமைச்சர் லிஸ் ட்ரஸ் ஆகியோரின் பெயர்கள் முன்னிலையில் உள்ளன. சுனாக்கிற்கு அதிக வெற்றி வாய்ப்பு இருந்த போதிலும், அவர் இந்திய, வெளிநாட்டு வம்சாவளி பூர்வீகத்தை சேர்ந்தவர் பிரச்சினை முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது.

இந்த நிலையில் தேர்தலுக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்யும் காலக்கெடு நேற்று முன்தினம் மாலையுடன் முடிந்த நிலையில் சஜித் ஜாவித் உள்பட 3 பேர் போட்டியில் இருந்து பின்வாங்கினர். இதன் மூலம் கட்சித்தலைவர் பதவிக்கான முதற்கட்ட தேர்தலில் 8 போட்டியாளர்கள் இருந்தனர். இந்நிலையில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று வாக்குப்பதிவில் கன்சர்வேட்டிங் கட்சியின் 358 எம்.பிக்கள் வாக்களித்தனர். இதில் 88 வாக்குகள் பெற்று ரிஷி சுனாக் முதலிடம் பிடித்து அடுத்து சுற்றுக்கு முன்னேறினார். 67, வாக்குகள் பெற்று பென்னி மோர்டான்ட் இரண்டாவது இடத்திலும், 50 வாக்குகள் பெற்று லிஸ் டிரஸ் 3ம் இடத்திலும் உள்ளனர். இன்று இரண்டாம் சுற்று தேர்தல் நடைபெறுகிறது. கடைசி இருவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை பலசுற்றுகளாக வாக்குப்பதிவு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பால்வெளி கிரகத்தில் தண்ணீருக்கான அறிகுறி

### ஜேம்ஸ் வெப் அடுத்த கண்டுபிடிப்பு

'பால்வெளி மண்டலத்தில் சுற்றி வரும் கிரகத்தில் தண்ணீர் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி கண்டறிந்துள்ளது,' என நாசா தெரிவித்துள்ளது.




பூமியில் இருந்து 10 லட்சம் மைல் தொலைவில் நிலை நிறுத்தப்பட்டுள்ள நாசாவின் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி எடுத்த பிரபஞ்சத்தின் முதலாவது வண்ணப்படம் நேற்று முன்தினம் வெளியானது. இதன் மூலம், 1,300 ஒளி ஆண்டுகளுக்கு முந்தைய பிரபஞ்சத்தின் தோற்றத்தை அறிய முடிந்தது. இந்த படம் உலகளவில் பெரிய பிரமிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்நிலையில், பால்வெளி மண்டலத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகிரகங்கள் சுற்றி வருகின்றன. இவை, 1,150 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளன. அங்குள்ள சூரியனைப் போன்ற நட்சத்திரத்தை சுற்றி வரும் இந்த கிரகங்களில், வாஸ்ப்-96 பி என்ற கிரகமும் ஒன்று.

இதில், தண்ணீர் இருப்பதற்கான அறிகுறிகள் இருப்பதை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி கண்டறிந்துள்ளது என நாசா நேற்று தெரிவித்தது.

வியாழனை விட பாதிக்கும் குறைவாகவும், விட்டத்தில் 1.2 மடங்கு பெரியதாகவும் உள்ள வாஸ்ப்-96 பி கிரகம், சூரியனைச் சுற்றி வரும் மற்ற கோள்களை விட மிகவும் பிரகாசத்துடன் ஒளிர்கிறது. இது, 538 டிகிரி செல்சியசுக்கும் அதிகமான வெப்பநிலையுடன் உள்ளது என்று நாசா கூறியுள்ளது.

இதற்கு முன்பு, நாசாவால் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட ஹப்பிள் தொலைநோக்கி, கடந்த 20 ஆண்டுகளாக பால்வெளி மண்டலத்தில் காணப்படும் பல சிறு கிரகங்களை ஆராய்ந்து, 2013ம் ஆண்டில் தண்ணீர் இருப்பதை கண்டறிந்தது.

ஆனால், ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியின் குறுகிய கால கண்டுபிடிப்புகள், பூமிக்கு அப்பால் மனிதன் வாழக் கூடிய கிரகங்களை கண்டறியும் விஞ்ஞானிகளின் தேடலில் ஒரு மைல் கல்லாக அமையும் என்று கருதப்படுகிறது.

## ஜப்பான் மாஜி பிரதமர் அபே கொலையில் திடீர் திருப்பம்

### திட்டமிட்ட சதி அம்பலம்

ஜப்பான் முன்னாள் பிரதமர் அபே சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் திட்டமிட்ட சதி அம்பலமாகி உள்ளது. ஜப்பானில் நீண்ட கால பிரதமராக பதவியில் இருந்த ஷின்சோ அபே கடந்த வாரம் நாரா ரயில் நிலையம் அருகே பிரசாரத்தின் போது சுட்டு கொல்லப்பட்டார். அவருடைய இறுதி சடங்கு நேற்று முன்தினம் நடந்தது. முதற்கட்ட விசாரணையில், மத குரு ஒருவருக்கு குறிவைக்கப்பட்டதாகவும், அவர் வராததால் துரதிஷ்டவசமாக அபே கொல்லப்பட்டார் எனவும் கொலையாளி யமகாமி கூறினார் என பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில், திடீர் திருப்பமாக அபே திட்டமிட்டு கொல்லப்பட்டிருக்கின்றமை அம்பலமாகி உள்ளது.

அபேவை சுட்ட, யமகாமி தங்கியிருந்த இடத்தில் இருந்து அவர் பயன்படுத்திய துப்பாக்கி போன்ற பல துப்பாக்கிகளை பொலிஸார் கைப்பற்றி உள்ளனர். விசாரணையில், அபே கொல்லப்படுவதற்கு முன், அந்த துப்பாக்கி எந்தளவுக்கு சக்தி வாய்ந்தது என்பதை அறிந்து கொள்ள யமகாமி சோதித்து பார்த்தார் என கூறி உள்ளார். இதையடுத்து நாராவில் உள்ள ஐக்கிய தேவாலயத்துக்கு சொந்தமான கட்டிடத்தை பொலிஸார் ஆய்வு செய்த போது அதில் ஏராளமான தோட்டா துளைத்த அடையாளங்கள் இருந்ததை உறுதி செய்தனர். எனவே திட்டமிட்டு பயிற்சி செய்து அபே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மேலும், அபே சுட்டுக் கொல்லப்பட்ட இடத்தில் இருந்து 90 மீற்றர் தூரத்தில் உள்ள கட்டடத்தில் துப்பாக்கி குண்டுகள் துளைத்த அடையாளம், தோட்டா பாகங்களை பொலிஸார் கண்டு பிடித்தனர்.

## தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த போகிறார்கள் சிங்கப்பூர் மக்களுக்கு அரசு எச்சரிக்கை



சிங்கப்பூரில் தாக்குதல் நடத்த வெளிநாட்டு தீவிர வாதிகள் சதித் திட்டம் தீட்டியிருப்பதால் எச்சரிக்கையுடன் இருக்கும்படி, தனது நாட்டு மக்களுக்கு சிங்கப்பூர் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. சிங்கப்பூரின் உள்நாட்டு பாதுகாப்பு துறை சமர்ப்பித்த ஆண்டறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: கொரோனா தொற்றில் இருந்து மீண்டு வருவதால், உலக நாடுகள் தங்களது நாட்டிற்கு வருவதற்கான பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தி வருகின்றன. இதை பயன்படுத்தி அதிகளவிலான தீவிரவாதிகள் பல்வேறு நாடுகளுக்குள் ஊடுருவ அதிக வாய்ப்பு உள்ளது.

தீவிரவாதிகளின் இந்த பட்டியலில் தாக்குதல் நடத்துவதற்கு ஏற்ற இடமாக, சிங்கப்பூர் தேர்வு தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே, சிங்கப்பூர் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். உடனடியான தீவிரவாத தாக்குதல் நடக்க வாய்ப்பில்லை என்ற போதிலும் மக்கள் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

# ஆண்–பெண் பாலின இடைவெளிக் குறியீடு பட்டியலில் இந்தியாவுக்கு 135 ஆவது இடம்



பொருளாதாரப் பங்கேற்பு மற்றும் வாய்ப்பு, கல்வி பெறுதல், சுகாதாரம் மற்றும் வாழ்தல், அரசியல் அதிகாரம் ஆகியவற்றில் ஆண், பெண் பாலின இடைவெளியை உலக பொருளாதார அமைப்பு ஆய்வு செய்து 15 ஆண்டுகளாக அறிக்கை வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில் நடப்பு ஆண்டுக்கான சர்வதேச பாலின இடைவெளி குறியீட்டை அந்த மையம் தற்போது வெளியிட்டுள்ளது. இதில் மொத்தம் 146 நாடுகள் பட்டியலில் இந்தியா 135 ஆவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் 5 இடங்கள் முன்னேறியிருந்தாலும்கூட, கடந்த 16 ஆண்டுகளாக பாலியல் சமத்துவத்தில் இந்தியா மோசமான நிலையிலேயே இருப்பதாக உலகப்பொருளாதாரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பாலின சமத்துவமின்மை அளவீடு 5 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ள 5 நாடுகளில் இந்தியா, கட்டார், பாகிஸ்தான், அசர்பைஜான், சீனா ஆகியவை இடம்பெற்றுள்ளன. அண்டை நாடுகளான பங்களாதேஷ் 71, நேபாளம் 96, இலங்கை 110, பாகிஸ்தான் 145 ஆவது இடங்களில் உள்ளன. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், கொங்கோ, ஈரான், சாட் ஆகிய நாடுகள் இறுதி 5 இடங்களில் உள்ளன. இந்தப் பட்டியலில் ஐஸ்லாந்து, பின்லாந்து, நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகள் முதல் 4 இடங்களைப் பிடித்துள்ளன.

## சமூகப் பொறுப்புடன் செயல்படும் நிறுவனங்களுக்கு விருது வழங்கப்படுமென தமிழக அரசு அறிவித்தது



சமூகப் பொறுப்புடன் செயல்படும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு விருது வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்துக்காக 42 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டினைச் செய்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

விவசாயம், கால்நடை, கல்வி, குடிநீர் மழைநீர் சேகரிப்பு உள்ளிட்டவற்றில் சிறந்து விளங்கும் தொழில் நிறுவனங்களுக்கு விருதும், ஒரு லட்ச ரூபாய் பரிசுத்தொகையும் முதலமைச்சரால் வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

மாவட்டத்திற்கு ஒரு தொழில் நிறுவனம் என மொத்தமாக 37 மாவட்டங்களில் சிறந்து விளங்கும் தொழில் நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கப்படும் என அந்த அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவில் மகாத்மா காந்தியின் சிலை அவமதிப்பிற்கு இந்தியா கடும் கண்டனம்




கனடாவின் ஒன்டாரியோவில் உள்ள ரிச்மண்ட் ஹில் நகரில், யோங்கே தெரு – கார்டன் அவென்யூ பகுதியில் உள்ள விஷ்ணு கோவிலில் நிறுவப்பட்டுள்ள மகாத்மா காந்தியின் சிலை மோசமான வார்த்தைகளை எழுதி சேதமுறச்செய்து அவமானப்படுத்தப்பட்டுள்ளது. கனடாவில் உள்ள ஓர் இந்துக் கோவிலில் நிறுவப்பட்டுள்ள மகாத்மா காந்தியின் சிலை சிதைக்கப்பட்ட குறித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவில் மகாத்மா காந்தியின் சிலை அவமதிக்கப்பட்டதற்கு இந்தியா தனது ஆழ்ந்த வேதனையையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளது. இது குறித்து, டொராண்டோவில் உள்ள இந்திய துணைத் தூதரகம் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், ரிச்மண்ட் ஹில்லில் உள்ள விஷ்ணு கோவிலில் உள்ள மகாத்மா காந்தி சிலை அவமதிக்கப்பட்டதில் நாங்கள் வேதனையடைந்துள்ளோம். இத்தகைய வெறுக்கத்தக்க காழ்ப்புணர்ச்சியானது கனடாவில் உள்ள இந்திய சமூகத்தின் உணர்வுகளை ஆழமாகக் காயப்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து உள்ளூர் பொலிஸார் தகவல் வழங்கியபோது, இதை வெறுப்புக் காரணமாகத்தூண்டப்பட்ட சம்பவம் என்று விவரித்துள்ளனர். கற்பழிப்பாளர், காலிஸ்தான் உள்ளிட்ட வார்த்தைகளால் காந்தி சிலையை யாரோ சிதைத்துவிட்டனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெறுப்புக் குற்றத்தை விசாரிக்க கனடா அதிகாரிகளுடன் நாங்கள் தொடர்பு கொண்டுள்ளோம், எனவும் இந்திய துணைத் தூதரகம் டுவீட் செய்துள்ளது.

இது குறித்து, கனடா உயர்ஸ்தானியர் அலுவலகம் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இந்திய சமூகத்தைப் பயமுறுத்த முயலும் இந்த வெறுப்புக் குற்றத்தால் நாங்கள் மிகவும் வேதனையடைந்துள்ளோம். இது இங்குள்ள இந்திய சமூகத்தில் கவலை மற்றும் பாதுகாப்பின்மையை அதிகரித்துள்ளது. நாங்கள் கனடா அரசாங்கத்தை அணுகி, விசாரணை செய்து, குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதை உறுதி செய்துள்ளோம், என்று தெரிவித்துள்ளது.



## அ.தி.மு.க. புதிய நிர்வாகிகள் நியமனத்தை எதிர்த்து தலைமை தேர்தல் ஆணையத்தில் ஓ.பி.எஸ். புகார்

அ.தி.மு.கவில் ஒற்றைத் தலைமை பிரச்சினை எழுந்ததை தொடர்ந்து கடந்த 11 ஆம் திகதி அந்த கட்சியின் பொதுக்குழு கூடி பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அது மட்டுமின்றி கட்சியின் விதிகளிலும் திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன்படி அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டார். அவரை எதிர்த்த ஓ.பன்னீர் செல்வம் அ.தி.மு.கவின் அடிப்படை உறுப்பினர் உள்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் நீக்கப்பட்டார்.


இதையடுத்து எடப்பாடி பழனிசாமி அணிக்கும், ஓ.பன்னீர் செல்வம் அணிக்கும் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. இருதரப்பிலும் மாறி மாறி தேர்தல் ஆணையம், நீதிமன்றம், சட்டசபை, காவல்துறை மற்றும் வங்கிகளுக்கு சட்ட ரீதியிலான செயற்பாடுகள் தொடர்பான கடிதங்களையும் மனுக்களையும் அனுப்பியபடியுள்ளனர். கட்சியை தக்க வைத்துக் கொள்ளவும், பதவியை காப்பாற்றிக் கொள்ளவும் இரு தரப்பிலும் பலமுனைகளில் பலப்பரீட்சை நடந்து வருகிறது.

இதற்கிடையே அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளராகத் தேர்வு செய்யப்பட்ட எடப்பாடி பழனிசாமிக்கு புதிய நிர்வாகிகளை நியமிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி எடப்பாடி பழனிசாமி நேற்று அ.தி.மு.கவுக்கு புதிய நிர்வாகிகளை நியமித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இந்த நியமனங்களுக்கு ஓ.பன்னீர் செல்வம் தரப்பினர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். எடப்பாடி பழனிசாமி புதிய நிர்வாகிகள் அறிவிப்பை வெளியிட்ட அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் ஓ.பன்னீர் செல்வம் தரப்பில் இருந்து தேர்தல் ஆணையத்துக்கு புகார் மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எடப்பாடி பழனிசாமி புதிய நிர்வாகிகளாக சிலரது பெயரை அறிவித்துள்ளார். இது சட்ட விரோதமான அறிவிப்பாகும். கட்சி விதிகளுக்கு எதிராக அவர் செயல்பட்டுள்ளார். புதிய நிர்வாகிகளை நியமனம் செய்யும்போது உரிய அனுமதி பெற வேண்டும். ஆனால், எந்த அனுமதியும் பெறப்படவில்லை. எனவே அவரது அறிவிப்பு கட்சி விதிகளின்படி செல்லாது. எனவே தலைமை தேர்தல் ஆணையர் அ.தி.மு.க. புதிய நிர்வாகிகள் நியமனத்தை ஏற்றுக் கொள்ளக்கூடாது. அதை நிராகரிக்க வேண்டும், என்று அந்த மனுவில் ஓ.பன்னீர் செல்வம் குறிப்பிட்டிருக்கிறார்.

## நான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் குடியுரிமைத் திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்படாது

### வேட்பாளர் யஷ்வந்த் சின்ஹா தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக யஷ்வந்த் சின்ஹா போட்டியிடுகிறார். இதையடுத்து, நாடு முழுவதும் அவர் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அரசியல் கட்சித் தலைவர்களிடம் ஜனாதிபதி தேர்தலில் தனக்கு ஆதரவு அளிக்கும்படி கோரிக்கை முன்வைத்து வருகிறார்.

அந்த வகையில், அசாம் மாநிலத்திற்குச் சென்று எதிர்கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு கோரிய அவர், நான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் குடியுரிமைத் திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வேன், என யஷ்வந்த் சின்ஹா தெரிவித்துள்ளார். அசாமின் முக்கியப் பிரச்சினை குடியுரிமைத் திருத்தமாகும். இந்தச் சட்டத்தை நாடு முழுவதும் கொண்டு வர அரசு விரும்பியது. ஆனால், இன்னும் அதைக் கொண்டு வர முடியவில்லை. முன்னதாக, கொரோனாப் பரவல் காரணமாக இந்த சட்டத்தை அமுல்படுத்தவில்லை என கூறினார்கள். ஆனால், இப்போது வரை இந்தச் சட்டத்ததை அமல்படுத்த முடியவில்லை. ஏனெனில், இது அவசரமாகக் கொண்டுவரப்பட்ட முட்டாள்தனமான வரைவு.

அரசியலமைப்பிற்கு வெளியில் இருப்பவர்களால் ஆபத்து வரவில்லை. ஆனால், அதிகாரத்தில் இருப்பவர்களால் ஆபத்து உள்ளது. நாங்கள் அதனைப் பாதுகாக்க வேண்டும். நான் ராஷ்டிரபதி பவனில் இருந்தால் குடியுரிமைத் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வேன், யஷ்வந்த் சின்ஹா உறுதியளித்திருக்கிறார்.

# உன்னிச்சையில் செவ்வாய் இரவு யானை தாக்கியதில் ஒருவர் சாவு





(வவுணதீவு நிருபர்)


மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள நெடியமடு கிராமத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு காட்டு யானை தாக்கியதில் நபர் ஒருவர் பலியானார் என ஆயித்திய மலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயித்தியமலையில் வசித்து வரும் கோயில் போரதீவைச் சேர்ந்த(54 வயதுடைய) மு. விசயராசா என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

உன்னிச்சை மாரியம்மன் ஆலயத்திலிருந்து ஆயித்தியமலையில் உள்ள தனது வீட்டுக்கு செல்லும்போது நெடியமடு வைத்தியசாலைக்கு முன்னால் பிரதான வீதியில் நின்ற காட்டுயானை தாக்கியதில் சம்பவ இடத்திலே இவர் பலியானார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வருகின்றது. இச் சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை (09 ஆம் திகதி) காட்டு யானை தாக்கியதில் வயல் காவலில் இருந்த விவசாயி ஒருவர் பலியாகியிருந்தார். அதற்கு சில வாரங்களுக்கு முன்னர் அடைச்சகல் பகுதியில் ஒருவரும் காட்டுயானை தாக்கி பலியாகியமை குறிப்பிடத்தக்கது.

## விபுலானந்தரின் 75 ஆவது ஆண்டு மகா சமாதி தின வைபவம் ஆரம்பம்



(காரைதீவு நிருபர் சகா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 75 ஆவது மகா சமாதி தின நிகழ்வுகள் கடந்த திங்கள் இரவு அவர் பிறந்த காரைதீவில் ஆரம்பமாகின.

முதல் நிகழ்வாக காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய முச்சந்தியில் சுவாமியின் திருவுருவ சிலை நடும் வைபவம் நடைபெற்றது. இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அருளானந்தம் உமா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் இம் மார் பள விலானசிலைஅங்குநிறுவப்பட்டுதிறந்துவைக்கப்படவிருக்கின்றது.

சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றத்தோடு இணைந்து இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

சுவாமியின் 75 ஆவது ஆண்டு மகாசமாதித் தினம், அவர் இயற்கை எய்திய எதிர்வரும் ஜுலை மாதம் 19 ஆம் திகதி நடைபெறவிருப்பது தெரிந்ததே.

அதற்கு முன்னோடியாக திங்களன்று நிறுவப்பட்ட இச்சிலை எதிர்வரும் 19 ஆம் திகதி திறந்து வைக்கப்பட இருக்கிறது.

சிலை நிறுவும் நிகழ்வு சுவாமி சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்ற செயலாளரும், அம்பாறை மாவட்ட கலாச்சார உத்தியோகத்தருமான கு. ஜெயராஜி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், கண்ணகை அம்மன் ஆலய தர்மகர்த்தா இரா. குணசிங்கம், விபுலானந்த பணிமன்ற முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பல அன்பர்கள் கலந்து கொண்டார்கள். செல்வி ரவீந்திரன் முகூர்த்தனா அடிகளாரின் வெள்ளை நிற மல்லிகையோ... என்ற பாடலைப் பாடினார். ஸ்தபதி வினாயகமூர்த்தி குமார் சிலை நிறுத்தும் கட்டுமானப்பணிகளைச் செய்தார்.

## மிகவும் பழமை வாய்ந்த மரம் காத்தான்குடியில் எரிந்தது!

மட்டக்களப்பு காத்தான்குடியில் நூறு வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த மரமொன்றில் நேற்று முன்தினம் மாலை தீ பரவியதால் மரம் முற்றாக எரிந்துள்ளது.

காத்தான்குடி 6 ஆம் குறிச்சி அப்துல் ஜவாத் அலீம் வீதியிலுள்ள காத்தான்குடி ஜாமியுழ் ழாபிரீன் ஜும் ஆ பள்ளி வாசல் மைய வாடியிலேயே இந்த மரம் நின்றுள்ளது.

இந்த மரத்தின் கிளைகள் அகற்றப்பட்ட நிலையில், நின்ற இம் மரத்தின் மீது தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

தீயைப் பொதுமக்கள் அணைத்துள்ளனர். எனினும் மரம் முற்றாக எரிந்துள்ளது.

இதே போன்று இந்த மைய வாடியின் மற்ற பகுதியிலும் இன்னுமொரு மரத்திலும் தீ பரவல் ஏற்பட்டு அந்த மரமும் எரிந்துள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.



# சம்மாந்துறையில் அகோர மாரியம்மனின் தீமிதிப்புச் சடங்கு பக்திபூர்வமாக நிறைவு







(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சம்மாந்துறை கோரக்கோயில் அகோர மாரியம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு வைபவம் நேற்றுப் புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது. கொரோனாவிற்கு பின்னர் இந்த சடங்கு, கடந்த 10 நாள்கள் நடைபெற்று நேற்று 800 அடியார்களின் தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவு பெற்றது.

ஆலய தலைமைப் பூசகர், மாரியின் மைந்தன் மு.ஜெகநாதன் தலைமையில் கிரியைகள் நடைபெற்றன. நேற்று 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி அளவில் மஞ்சள் குளித்து தீ மிதித்தல் அம்பாள் அருளால் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது என்று ஆலய பரிபாலன சபை தலைவர் ம.பாலசுப்ரமணியம் தெரிவித்தார்.

# நியூயோர்க்கில் அமெரிக்க ஓபன் டென்னிஸ் ஜோகோவிச் களமிறங்குவது சந்தேகம்



சமீபத்தில் விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் ஏழாவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றார் செர்பியா வீரர் நோவக் ஜோகோவிச். இவர், அடுத்த மாதம் 29 ஆம் திகதி நியூயோர்க்கில் ஆரம்பமாகவுள்ள அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் களமிறங்குவரா, என்பதில் சந்தேகம் நிலவுகிறது.

கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டால்தான் அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குள் நுழைய முடியும். கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்திக் கொள்ள தொடர்ந்து மறுத்து வரும் ஜோகோவிச், தற்போதைய சூழலில் நான் ஆஸ்திரேலியாவுக்கும் அமெரிக்காவுக்கும் செல்ல முடியாது. ஆனால், அமெரிக்க ஓபனில் விளையாட வேண்டும் என்பதில் ஆர்வமுடன் காத்திருக்கிறேன். அங்கிருந்து நல்ல தகவல்கள் வரும் என்று நம்புகிறேன். அப்படி நடக்காவிட்டாலும் கூடக் கவலையில்லை, என்று தெரிவித்திருக்கிறார்.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் ஆஸ்திரேலிய ஓபனில் கலந்துகொள்ள அங்கு சென்ற ஜோகோவிச், கொரோனாத் தடுப்பூசி செலுத்தியிராத காரணத்தினால் அந்த நாட்டுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எல்.பி.எல். 2022 கிரிக்கெட் தொடர் போட்டி விவரங்கள் வெளியாகின



எல்.பி.எல். 2022 கிரிக்கெட் தொடரானது அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி, 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. கடந்த ஆண்டு சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிய ஜப்னா கிங்ஸ் அணியும் இரண்டாவது இடத்தைப் பெற்ற கோல் கிளேடியேட்டர்ஸ் அணியும் இந்தத் தொடரின் முதல் போட்டியில் ஒன்றையொன்று சந்திக்கவுள்ளன.

தொடரில் மொத்தமாக 20 லீக் போட்டிகள் உள்ளடங்கலாக 24 போட்டிகள் நடைபெறவுள்ளன. முதல் கட்டமாக ஓகஸ்ட் 10 ஆம் திகதிவரை 14 லீக் போட்டிகள் கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச மைதானத்தில் நடைபெறவுள்ளன. இதன் பின்னர் நடைபெறவுள்ள லீக் போட்டிகள், தெரிவுச்சுற்று, வெளியேற்றல் சுற்றுப் போட்டிகள் மற்றும் இறுதிப்போட்டி இனைத்தும் ஹம்பாந்தோட்டை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன. தினமும் இரண்டு லீக் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. முதல் போட்டி பிற்பகல் 3 மணிக்கும், இரண்டாவது போட்டி இரவு 7.30க்கும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளன.

## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசை முதல் இடத்தில் தென்னாபிரிக்கா



இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்டில் இலங்கை அணி இன்னிங்ஸ் வெற்றி பெற்றதால் 2 போட்டிகள் கொண்ட தொடர் 1-1 என்ற கணக்கில் சமனிலையில் முடிவடைந்தது.

இந்தப் போட்டிக்குப் பிறகான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசை வெளியாகியுள்ளது.

அணிகளின் வெற்றி சதவீதத்தின் அடிப்படையில் பட்டியலில் இடங்கள் தீர்மானிக்கப்படுவதால், இலங்கையுடன் தோல்வி அடைந்தஆஸ்திரேலிய அணி 70 சதவீத புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் 71.43 சதவீத புள்ளிகளுடன் தென்னாபிரிக்க அணி முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

54.17 சதவீதத்துடன் இலங்கை அணி இந்தப் பட்டியலில் மூன்றாவது இடத்திலும், நான்காவது இடத்தில் பாகிஸ்தான் அணி 52.38 சதவீத புள்ளிகளுடனும் உள்ளன. இந்திய அணி 52.08 சதவீத புள்ளி யுடன் இந்த பட்டியலில் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது.



## ஒருநாள் போட்டியில் 250 சிக்ஸர்கள் அடித்து இந்தியாவின் ரோகித் சர்மா புதிய சாதனை

இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் போட்டி ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ரி-20 தொடரை இந்திய அணி கைப்பற்றிய நிலையில் ஒருநாள் தொடர் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஆரம்பமாகியுள்ளது.

முதலாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றது. இந்தப் போட்டியில் ரோகித் சர்மா 7 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 76 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்தப் போட்டியில் 5 சிக்ஸர்களை அடித்த அவர், ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் மொத்தம் 250 சிக்ஸ்ர்கள் விளாசிய முதல் இந்தியர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் அதிக சிக்சர்களை அடித்தவர்களின் இடத்தில் சர்வதேச அளவில் ரோகித் சர்மா நான்காவது இடத்தில் உள்ளார். முதல் இடத்தில் அப்ரிடி - 351, இரண்டாவது இடத்தில் கிறிஸ் கெயில் - 331, மூன்றாவது இடத்தில் சனத் ஜெயசூரியா - 270 சிக்ஸர்களுடன் உள்ளனர். தற்போது சர்வதேசப் போட்டிகளில் விளையாடுபவர்களில் ரோகித் சர்மாவே முதலிடத்தில் இருக்கிறார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று நடைபெறுகிறது.



## டென்னிஸ் நட்சத்திரம் ரோஜர் பெடரர் தனது ஓய்வு குறித்து சூசகமாகக் கருத்து

20 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ள டென்னிஸ் அரங்கின் பிரபலமான சுவிட்ஸர்லாந்து நட்சத்திரம் ரோஜர் பெடரர் காயம் காரணமாக பல மாதங்களாக டென்னிஸ் போட்டிகளில் விளையாடவில்லை. சமீபத்தில் நடந்து முடிந்த உயரிய அந்தஸ்து கொண்ட கிராண்ட்ஸ்லாம் தொடரான விம்பிள்டன் தொடரிலும் காயம் காரணமாக அவரால் பங்கேற்க முடியவில்லை. மீண்டும் இவர் எப்போது களத்துக்கு திரும்புவார், என ரசிகர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்து காத்துள்ள நிலையில், அவர் தனது ஓய்வு முடிவு குறித்து சூசகமாக அறிவித்துள்ளார்.

நான் வெற்றியை விரும்புபவன். ஆனால், இனியும் சவாலாக விளையாட முடியவில்லை எனில் விளையாடுவதை நிறுத்துவது சிறந்தது. மகிழ்ச்சியாக இருக்க எனக்கு டென்னிஸ் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

இப்போது நான் சின்னச் சின்ன விடயங்களில் மகிழ்ச்சி அடைகிறேன்.

என் மகன் எதையாவது சரியாகச் செய்யும் போதும் என் மகள் நன்றாக மதிப்பெண் பெறும்போதும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு தொழில்முறை வாழ்க்கையில் நிரந்தரமாக நீடிக்க முடியாது என்று எனக்குத் தெரியும், என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்த அரசு பிரயத்தனமாம்!

## சாடுகிறார் அநுர



மக்களின் போராட்டங்களை அடக்குமுறைகளின் ஊடாக முடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்த நிலைமைக்கு மத்தியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் (ஜே.வி.பி.) அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் அவசரகால சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து வெளியிட்ட விசேட அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது சிந்தித்து செயற்படாவிட்டால் பாரிய அழிவை நோக்கிச் செல்ல வேண்டியேற்படும். தற்போது நாம் அழிவின் விளிம்பிலேயே இருக்கின்றோம். காரணம் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவி விலகலை அறிவிப்பார் என்று சபாநாயகர் கடந்த 9 ஆம் திகதி அறிவித்திருந்தார். எனினும் இதுவரையில் அதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

மாறாக, பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் அடக்குமுறைகளால் மக்களின் போராட்டங்களைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றது.

அத்தோடு நாடளாவிய ரீதியில் அவசரகால சட்டத்தையும் , மேல் மாகாணத்தில் ஊரடங்கையும் அமுல்படுத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருக்கின்றார். இதற்கு மத்தியில் பயங்கரவாதத் தடை சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது தவறானதொரு செயற்பாடாகும்.

நாட்டில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வுகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை விடுத்து அடக்குமுறைகளின் ஊடாகப் போராட்டங்களை முடக்குவதற்கு முயற்சித்தால் அது பாரிய அழிவையே ஏற்படுத்தும்.

எனவே, மக்களின் குரலை செவிமடுத்து அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு வலியுறுத்துகின்றோம். பாதுகாப்பு தரப்பினரையும் மக்களுக்கு சார்பாக செயற்படுமாறு கோருகின்றோம். – என்றார்.

## அரச கட்டடங்களிலுள்ள பல சொத்துகள் சேதம் தொல்பொருள் சின்னங்களை சேதப்படுத்தாதீர்!

### மக்களிடம் கோரிக்கை

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற மக்கள் எழுச்சி போராட்டத்தின் போதும் அதன் பின்னரும் கொழும்பில் உள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் உட்பட ஜனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகையில் புராதன மற்றும் கலாசார தொல்பொருள் சொத்துகள் அழிக்கப்பட்டுள்ளன.

மேலும் அரசுக்கு சொந்தமான கட்டடங்களில் உள்ள தொல்பொருள் நினைவுச் சின்னங்களை பாதுகாக்குமாறு மக்களிடம் தொல்லியல் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் உட்பட் அலுவலகம் மற்றும் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் இருந்த புராதன மற்றும் கலாசார தொல்பொருள் சொத்துகள் பாரியளவில் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், அரசுக்கு சொந்தமான கட்டடங்களில் உள்ள தொல்பொருள் நினைவுச் சின்னங்களை பாதுகாக்க அரசு எதிர்ப்பு போராட்டக்காரர்களிடம் தொல்லியல் திணைக்களம் கோரிக்கை விடுக்கிறது. நாட்டு மக்களால் தொல்பொருள் நினைவு சின்னங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட இடங்களில் உள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த சொத்துகள் மேலும் அழிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

மேலும் தொல்பொருள் சொத்துக்களை திருடுதல் மற்றும் அவற்றுக்கு சேதம் ஏற்படுத்துவது போன்றவற்றுக்கு தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

## படையினர் ஊடாக ஜனநாயகத்தை அழித்து மக்களை அடக்குவதற்கு அரசாங்கம் முயற்சி!

### சஜித் விசனம்



ஆயுதமேந்திய பாதுகாப்புப் படையினர் ஊடாக ஜனநாயகத்தை அழித்து மக்களை அடக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்த நேரத்தில் பாதுகாப்புப் படையினர் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

நாட்டு நிலைவரம் தொடர்பில் விசேட அறிவித்தலொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்–

ஜனநாயகத்தை மதிக்கும் மக்கள் முன்னெடுத்த அமைதிப் போராட்டத்தை முறியடிக்க அரசாங்கம் அடக்குமுறையை ஆரம்பித்துள்ளது. இந்தத் தருணத்தில் இருவரை மாத்திரம் பாதுகாப்பதை விடுத்து முழு நாட்டு மக்களையும் பாதுகாப்பு படையினர் பாதுகாக்க வேண்டும்.

முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை வெளியிட்டவாறு ஆயுதமேந்திய பாதுகாப்புப் படையினர் ஊடாக ஜனநாயகத்தை அழித்து மக்களை அடக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்நேரத்தில் பாதுகாப்புப் படையினர் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

அதிகார வெறி பிடித்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான கும்பலின் ஏமாற்று நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இனி மேலும் இந்த ஏமாற்று நடவடிக்கைக்கு இடமில்லை.

ஜனநாயகத்துக்காகப் போராடும் மக்களை அடக்குமுறைக்குட்படுத்த வேண்டாம் என பாதுகாப்பு தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கின்றேன். பாதுகாப்பு படையினர் மீது மக்கள் கொண்டுள்ள மரியாதையைக் காப்பாற்றுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

மக்களின் அமைதியான வாழ்வுடன் விளையாடுவதை அரசாங்கம் கைவிட வேண்டும். இத்தருணத்தில் மக்கள் அமைதியாகவும் ஜனநாயகத்தை மதித்தும் செயற்பட வேண்டும். – என்றார்.

## இலங்கையின் நெருக்கடிகள் தொடர்பில் ரஷ்யா மீது உக்ரைன் ஜனாதிபதி சாடல்!



இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி ரஷ்யாவால் உருவானது என உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கை நெருக்கடிக்கு ரஷ்யா காரணம் உக்ரைன் மீதான படையெடுப்பின் ரஷ்யா உணவுப்பொருள்களைத் தடை செய்ததால் உலகம் முழுவதும் நெருக்கடி உருவாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

சியோலில் இடம்பெற்ற ஆசிய தலைமைத்துவ மாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் படையெடுப்பின் போது ரஷ்யா பயன்படுத்திய தந்திரோபாயங்களில் ஒன்று பொருளாதார அதிர்ச்சியாகும் எனத் தெரிவித்துள்ள ஜெலென்ஸ்கி, தற்போதைய நெருக்கடி காரணமாக நாடுகள் எரிபொருள் உணவு நெருக்கடி– உணவுவிநியோக பாதிப்பை எதிர்கொள்வதன் காரணமாக நாடுகளில் குழப்பம் ஏற்பட்டுள்ளது இது ரஷ்யாவின் நிகழ்ச்சி நிரலிற்கு உதவியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதுஉங்களுக்கு மாத்திரம் கரிசனையளிக்கின்ற விடயமல்ல உதாரணத்துக்கு இலங்கையை அங்கு நடப்பவைகளைப் பாருங்கள் அதிர்ச்சியளிக்கும். எரிபொருள் உணவு விலை அதிகரிப்பு சமூக வெடிப்பிற்கு காரணமாக அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது எப்படிமுடியும் என்பது எவருக்கும் தெரியாது. ஆனால், இதேபோன்ற நிலை ஏனைய நாடுகளில் ஏற்படலாம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும் என அவர் தெரிவித்துள்ளார்.

## மிஸ்டர் பீன் கிரிக்கெட் அணிக்குள் கொண்டுவரப்பட்டது போலுள்ளது!

### ரணிலை கடுமையாக விமர்சித்தார் சனத்



பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அவசரகால நிலையையும் ஊரடங்கு சட்டத்தையும் அறிவித்துள்ளதைக் கடுமையாக விமர்சித்துள்ள முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத்ஜெயசூரிய மிஸ்டர் பீன் கிரிக்கெட் அணிக்குள் சேர்க்கப்பட்டுள்ளது போல இது உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

டுவிட்டர் பதிவில் சனத் ஜெயசூரிய மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

தெரிவுக்குழுவினர் அவர் ஒரு நடிகர் கிரிக்கெட் வீரர் அல்லர் என நிராகரித்தாலும் அவரை கிரிக்கெட் அணிக்குள் கொண்டுவந்தால் எப்படியிருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

நடுவர் அவர் ஆட்டமிழந்து விட்டார் என அறிவித்த பின்னரும் அவர் ஆடுகளத்திலிருந்து தொடர்ந்தும் விளையாடிக் கொண்டிருக்கின்றார்.

இனியும் விளையாட்டுக்கள் இல்லை இறுதி வீரருக்கு தனியாக துடுப்பெடுத்தாடுவதற்கு அனுமதியில்லை என சனத்ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.07.2022இல் வெளியிடப்பெற்றது.